2018 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(உ) மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் உறுப்பினர்களாகப் பணியாற்ற மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. மருதமுத்து மற்றும் துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோரிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.*

மேற்குறிப்பிட்டுள்ள வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கும் காலம் வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வாரியத்தில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

12. வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதமும் பதிலுரையும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை*